
# திராவிடத்தால் வாழ்கிறோம்

810


எழுத்து: கோவி.லெனின்

ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## தமிழில் ஓர் முக்கிய மொழிபெயர்ப்பு!




மேற்கு வங்கத்தைச் சேர்ந்த தேவி சட்டர்ஜி எழுதிய நூல் ‘அப் எகைன்ஸ்ட் கேஸ்ட்: கம்பாரெட்டிவ் ஸ்டடி ஆஃப் அம்பேத்கர் அண்ட் பெரியார் (Up against caste: Comparative Study of Ambedkar and Periyar). சாதிய கட்டமைப்பின் வேரையும், அண்ணல் அம்பேத்கரும் பெரியாரும் சாதி ஒழிப்புக் களத்தில் ஆற்றிய பணிகளையும் ஒப்பிட்டு, திறனாய்வு செய்யும் நூல் இது. 2004-ஆம் ஆண்டில் வெளியான இந்நூல் பெரும் வரவேற்பைப் பெற்றது. அதனை தமிழில் மொழிபெயர்த்து வருவதாக, அண்ணல் அம்பேத்கர் பிறந்த நாளில் அறிவித்திருக்கிறார் எழுத்தாளர் வெற்றிச்செல்வன்.

இதுதொடர்பாக, சமூக வலைத்தளப் பக்கத்தில் எழுதியுள்ள அவர்:

“அம்பேத்கர் அவரது பேச்சிலும், எழுத்திலும் இந்து மதத்தின் சமூக அமைப்பு குறித்த ஒரு தத்துவார்த்தமான புரிதலை ஏற்படுத்த முயன்றார். இந்து சமூக அமைப்பு என்பது உறுதியாகவும், வெளிப்படையாகவும் ஒரு சூப்பர்மேனின் நன்மைக்காகவே வடிவமைக்கப்பட்டது. பார்ப்பனரே அந்த சூப்பர்மேன். பொதுமக்கள் எனப்படுபவர்கள் சூத்திரர்கள். இந்து சமூக அமைப்பைக் காப்பாற்றுவதற்காக, எத்தகைய உத்திகள் உருவாக்கப்பெற்றுள்ளன என்பதற்கு, மனு ஸ்மிருதியில் இருந்து சான்றுகளை எடுத்துக் காட்டினார் அம்பேத்கர்.

இந்து சமூக அமைப்பு என்பது கடவுளால் உருவாக்கப்பட்டது என்றும், இதனை மாற்றுவதற்கோ, திருத்துவதற்கோ, விமர்சிப்பதற்கோகூட யாருக்கும் உரிமை கிடையாது என்பதையும் அம்பேத்கர் சுட்டிக்காட்டினார். ‘பண்டைய இந்தியாவில் புரட்சியும், எதிர்ப்புரட்சியும்’ என்ற நீளமான கட்டுரை ஒன்றில், பவுத்த மதம், பார்ப்பனிய இந்துமதம், கலாச்சாரச் சுரண்டல், பெரிய அளவில் நடந்த அரசியல் மாற்றங்கள் ஆகியவற்றுக்கு இடையிலான தொடர்புகளை, அம்பேத்கர் பகுப்பாய்வு செய்தார். சமூகம் குறித்தும், சமூக மாற்றம் குறித்தும் விரிவான கோட்பாடு ஒன்றைக் கட்டமைப்பதற்கான அம்பேத்கரின் முயற்சி இது” என நூலில் இடம்பெற்றுள்ள கருத்துகளின் சில துளிகளைப் பகிர்ந்துள்ளார். பெரியார் பிறந்தநாளான செப்டம்பர் 17-ஆம் தேதி இந்நூலை வெளிக் கொண்டு வர திட்டமிட்டுள்ளார். பெரியாரையும் அம்பேத்கரையும் எதிரிகள் போல சித்தரிக்கும் போக்கு உருவாகியுள்ள இக்காலகட்டத்தில் மொழிபெயர்க்கப்பட வேண்டிய அவசியமான நூல்.

## ஃப்ளாஷ்பேக்





கே.ஏ.ராஜீவ் காந்தி

### பேராசிரியர் நடத்தி வைத்த திருமணம்!

எனது தந்தை எஸ்.கே.ஆறுமுகம் திருத்தணி ஒன்றியத்தில், கழக முன்னோடி. ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் மற்றும் பொதுக்குழு உறுப்பினராகவும் இருந்தார். இந்தப் புகைப்படம், 1987- ஆம் ஆண்டு, எனது சகோதரி கே.ஏ.சாந்தி அவர்களின் சுயமரியாதைத் திருமணத்தை, நமது இனமான பேராசிரியர் நடத்தி வைத்தபோது எடுக்கப்பட்டது. எங்கள் கிராமத்தில் ஏராளமான சுயமரியாதைத் திருமணங்கள் நடந்திருந்தாலும், பாசமிகு பேராசிரியர் அவர்கள் எங்கள் வீட்டு திருமணத்தை நடத்தியது போல் எந்தத் திருமணமும் நடத்த முடியவில்லை என்பது இந்தப் புகைப்படத்தைப் பார்க்கும்போது உணர்வோம்..

– **கே.ஏ.ராஜீவ் காந்தி,**
**மத்தூர் கிளைக்கழகம், திருத்தணி, திருவள்ளூர் (மா).**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கழகம்ருவூ

### இசைப் பெரும்புயலுக்கு நிதிஅளிப்பு!

‘இசைப் பெரும்புயல்’ திருவாவடுதுறை இராஜரத்தினம் தி.மு.கழகத்தின் வளர்ச்சியில் மிகுந்த அக்கறை கொண்டிருந்தவர். கழகத்தினர் இல்ல நிகழ்ச்சிகளிலும், கழக மாநாடுகளிலும் இசை நிகழ்ச்சி நடத்தியுள்ளார். 1956-ஆம் ஆண்டு இரத்தக் கொதிப்பு காரணமாக அவர் மறைவுற்றபோது, தி.மு.கழகத்தின் சார்பாக அவரது குடும்பத்திற்கு 3,000 ரூபாய் நிதியுதவி அளிக்கப்பட்டது. அதில் இரண்டாயிரம் ரூபாயை கலைஞர் வழங்கினார்.

# எல்லோருக்கும் எல்லாம்

முரசொலி பாசறைக் குழு

58

**அநீதிக்கு எதிரான நீதியின் குரல்! அதன் சட்ட வடிவமாம், இட ஒதுக்கீடு குறித்த வரலாற்றைப் பேசும் எல்லோருக்கும் எல்லாம்!**

*இருபதாம் நூற்றாண்டின் தொடக்கக் காலகட்டம் என்பது உலக அளவில் அரசியல் புரட்சிகள் நிகழ்ந்து கொண்டிருந்த காலம். மன்னராட்சிக்கு எதிராக, மக்களாட்சித் தத்துவங்களும் முதலாளித்துவ கொடுமைகளுக்கு எதிராக, தொழிலாளர் எழுச்சியும் தீவிரமாக எழுந்த காலகட்டம். இடதுசாரித் தத்துவம் உலக அளவில் வீச்சாகப் பரவிக்கொண்டிருந்தது.*

*முதல் உலகப் போர், நாடுகளில் அணி சேர்க்கையை உருவாக்கிக் கொண்டிருந்தது. இந்தியாவிலும் அதன் தாக்கம் எதிரொலித்தது. காங்கிரஸ் இந்திய விடுதலையை முன்வைத்து இயங்கியது. ஆனால், தென்னிந்தியாவின் சமூக-பண்பாட்டு-அரசியல் களம் அவற்றிலிருந்து மாறுபட்டதாக இருந்தது.*

*பார்ப்பனிய ஆதிக்கத்தில் இருந்து விடுதலை பெறுவதை, முதன்மை நோக்காகக் கொண்டு, இங்கு சமூக - அரசியல் களம் உருவானது. அதில் முதன்மைக் கருவியாக வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் பார்ப்பனரல்லாதவர்களால் முன்வைக்கப்பட்டது.*

*கூட்டப்பட்டது. அந்த மாநாட்டின் தலைவராக கோவை டி.ஏ.இராமலிங்க செட்டியார் இருந்தார். அவரை அழைத்துப் பேசிய பெரியார், “பார்ப்பனர் - பார்ப்பனரல்லாதார் பிரிவினையில்லையென்பது உடலிலுள்ள புண்ணை மூடிவைத்து, அழுக விடுவதற்கு ஒப்பானதாகும். அதற்கேற்ற பரிகாரம் செய்து, உடலநலத்தைக் கெடுக்கும் புண்ணை ஆற்ற முயல்வதே, பொதுநோக்குடைய அறிஞர் கடமையாகும்” என்று கூறினார்.*

*சேரன்மாதேவியில் ‘குருகுலம்’ என்ற பெயரில், வ.வே.சு. ஐயர் பொதுமக்களிடமிருந்தும், காங்கிரஸிலிருந்தும் பணம் பெற்று நடத்திய பள்ளியில், பார்ப்பன மாணவர்களுக்குத் தனிப் பந்தி, பிரார்த்தனைக்கு வேறு இடம் என்று பாகுபாடுகளைக் கட்டவிழ்த்துவிட்டிருந்த காலம் அது. காந்தியடிகள் தலையிட்டும் இந்தப் பாகுபாட்டை ஒழிக்க முடியவில்லை. ஆங்கிலேயர் ஆதிக்கத்தை விட, இந்த ஆரிய ஆதிக்கத்தை ஒழிப்பதே முதன்மைத் தேவை*



ஓவியம் : ரவி பேலட்

*36.5%, முஸ்லிம்கள் 5.5%, இந்திய கிறிஸ்தவர்கள் 4.95% மட்டுமே இருந்தனர்.*

*துணை ஆட்சியர்களில், 77 பேர்கள் பார்ப்பனர்களாக இருந்தனர். மற்ற இந்துக்கள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் சேர்ந்தே 52 பேர்கள்தான் இருந்தனர். உதவி நீதிபதிகளாகப் பார்ப்பனர்கள் 15 பேர்கள் இருந்தனர். பார்ப்பனரல்லாத இந்துக்கள் மூவர் மட்டுமே இருந்தனர். முஸ்லிம்களோ, கிறிஸ்தவர்களோ ஒருவர் கூட இல்லை. மாவட்ட முன்சீப்களாக பார்ப்பனர்கள் 93 பேர்கள் இருந்தனர். பார்ப்பனர் அல்லாத இந்துக்கள் 25 பேர்களும், முஸ்லிம்கள் இருவரும், இந்திய கிறிஸ்தவர்கள் 5 பேர்களும் மட்டும் இருந்தனர்.*

### ஆரிய அடிக்கட்டுமானத்தில் விழுந்த வேட்டு!

*இப்படி கல்வி, வேலைவாய்ப்பு என அனைத்திலும் பார்ப்பனர்களின் ஆதிக்கமே கொடிகட்டிப் பறந்தது. பார்ப்பனரல்லாத மக்கள் கல்வி- வேலைவாய்ப்புகளில் உரிமைகள் அற்றவர்களாக வீழ்த்தப்பட்டிருந்தனர். இதுவே பார்ப்பனிய ஆதிக்கத் தகர்ப்புச் சிந்தனை வேர்விட காரணமாய் இருந்தது. அந்தச் சிந்தனைக்கான செயல் வடிவமாக வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை முன்வைத்தனர். பெரியாரும் அதே குரலை, கோரிக்கையை முன்வைத்துத்தான் காங்கிரஸிலிருந்து வெளியேறினார். சுயமரியாதை இயக்கம் முளைத்தது. பார்ப்பனிய ஆதிக்கத்தின் அடிக்கட்டுமானத்தையே அசைத்துப் பார்த்தது சுயமரியாதை இயக்கம்.*

*ஆரிய ஆதிக்கத்தை நிலைநிறுத்திய வருணாசிரமக் கொள்கைகள், மனுஸ்மிருதி, புராண, இதிகாசங்கள், அதன் பெயரில், நிலைநிறுத்தப்பட்ட கடவுள்கள், மதம், சாதிகள் என அனைத்தையும் கேள்விக்குள்ளாக்கியது சுயமரியாதை இயக்கம். இவற்றின்மீது இதற்கு முன்பு நடந்திராத இடைவிடாத தாக்குதல், பார்ப்பனரல்லாத மக்களிடையே மாபெரும் எழுச்சியைத் தூண்டியது. அடிமைத்தனத்தில்*

# தொடர்வோம் இன்னொரு சந்தர்ப்பத்தில்...

*1909-ஆம் ஆண்டில் பார்ப்பனரல்லாதார் சங்கமும், 1912-ஆம் ஆண்டில் சென்னை ஐக்கிய சங்கமும், 1913-ஆம் ஆண்டில் சென்னை திராவிடர் சங்கமும், 1916-ஆம் ஆண்டு முதல் தென்னிந்திய நல உரிமைச் சங்கமும் (நீதிக்கட்சி) வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை உரக்க வலியுறுத்தின. அத்தகைய சூழலில்தான் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை காங்கிரஸ் ஏற்கவில்லை எனக்கூறி, 1925-இல் நடைபெற்ற காஞ்சிபுரம் மாநாட்டில் இருந்து, காங்கிரஸை விட்டு வெளியேறினார் தந்தை பெரியார்.*

*இந்தியத் துணைக்கண்டம் ஆங்கிலேயர் எதிர்ப்பு என்ற திசையில் பயணித்துக் கொண்டிருந்தபோது, அதற்கு நேர்மாறாக ஆரிய ஆதிக்கத் தகர்ப்பு என்ற திசையை நோக்கி, தமிழ்ச்சமூகம் பயணிக்க இத்தனை தீவிரமாக முனைப்புக் காட்டியது ஏன் என்ற கேள்வி நிச்சயம் எவருக்கும் எழும்.*

### சுயமரியாதை இயக்கத்திற்கு முன்!

*காஞ்சிபுரம் மாநாட்டில் இருந்து, சற்று பின்னோக்கிச் சென்றால், இதற்கான விடை கிடைக்கும். காஞ்சிபுரத்தில் 22.11.1925 அன்று திரு.வி.க. தலைமையில், காங்கிரஸ் தமிழ் மாகாண மாநாடு நடைபெற்றது. அம்மாநாட்டில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ தீர்மானத்தை தந்தை பெரியார் கொண்டு வந்தார். அந்தத் தீர்மானம் நிராகரிக்கப்பட்டது. அதனால்தான், “காங்கிரஸ் கட்சியால், பார்ப்பனரல்லாதார் நன்மை பெறமுடியாது; காங்கிரஸை ஒழிப்பதே இனி எனது வேலை” என்று மாநாட்டிலேயே கூறிவிட்டு வெளியேறினார். பெரியாருடன் இணைந்து ஒரு பெருங்கூட்டம் மாநாட்டை விட்டு வெளியேறியது.*

*பெரியாரின் முயற்சியால் அங்கேயே ‘பார்ப்பனரல்லாதார் மாநாடு’ ஒன்று என்ற முடிவுக்கு, பெரியார் வந்ததில், சேரன்மாதேவி குருகுலமும் முக்கிய காரணமாய் அமைந்தது.*

### தலைவிரித்தாடிய பார்ப்பனிய ஆதிக்கம்!



விஜயபாஸ்கர்

*ஆனால், சேரன்மாதேவி குருகுலம் மட்டும்தான் அந்தச் சிந்தனையை விதைத்ததா என்றால் இல்லை. ஏனெனில், 1901 மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, பார்ப்பனர்களும் அதன் உட்பிரிவைச் சேர்ந்தவர்களும் 3.5% மட்டுமே இருந்தனர். அவர்களில் தமிழ் பார்ப்பனர்கள் 73.6%, தெலுங்கு பார்ப்பனர்கள் 67.3% எழுதப் படிக்கத் தெரிந்தவர்களாக இருந்தனர். மக்கள்தொகையில் 96.5%-ஆக இருந்த பார்ப்பனரல்லாத மற்ற சாதியினரில் நாயர்கள் 39.5%, செட்டியார் 32%, இந்திய கிறிஸ்தவர்கள் 16.2%, நாடார்கள் 15.4%, பலிஜா- கவரை நாயுடு சமூகத்தினர் 14.3% எழுதப் படிக்கத் தெரிந்தவர்களாக இருந்தனர். மற்ற சாதியினரில் 10% கூட எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் இல்லை. அதேபோல பார்ப்பனர்களில் ஆங்கிலம் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களும் அடுத்த பத்தாண்டுகளில் மூன்றில் ஒருபங்காக அதிகரித்துவிட்டனர்.*

*1918-ஆம் ஆண்டு தரவுகள்படி, சென்னை பல்கலைக்கழகத்தில், மக்கள் தொகை எண்ணிக்கையைக் காட்டிலும் அதிகப்படியான இடங்களை ஆக்கிரமித்த ஒரு பிரிவாகவும் பார்ப்பனர்களே இருந்தனர். இதற்கு முன்பிருந்தே அரசுப் பணிகளும் அவர்கள் வசமே இருந்தன. 1881-ஆம் அரசு உத்தியோக விவரங்களின்படி, 10 ரூபாய்க்கு மேல் ஊதியம் வழங்கப்பட்ட பணிகளில் 42.2 சதவிகிதம் பார்ப்பனர்கள் இருந்தனர். இதர இந்துக்கள்*

*இருந்து விடுபட வேண்டும், அதற்கு கல்வி- வேலை வாய்ப்பை நுகர வேண்டுமென்ற உணர்வு பார்ப்பனரல்லாத மக்களிடையே பீறிட்டுக் கிளம்பியது.*

*தென்னகத்தில் மட்டுமல்ல, இந்தக் காலகட்டத்தில் நாடு முழுவதும் ஆரிய ஆதிக்கம் பல்வேறு வடிவங்களில் நிலைநிறுத்தப் பட்டிருந்தன. அவற்றுக்கெதிராக ஒவ்வொரு மாநிலத்திலும் நடைபெற்ற இடஒதுக்கீடு போராட்ட வரலாற்றினைத்தான் கடந்த 57 வாரங்களாக திராவிட இயக்க எழுத்தாளர் சு.விஜயபாஸ்கர் அவர்களின் கடும் முயற்சியில், அரிய பல தகவல்களுடன் வாசித்து வந்தோம். அதன் தொடர்ச்சியாக சுயமரியாதை இயக்கம் தொடங்கி, திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் இடஒதுக்கீட்டுக்கான உரிமைக்களங்களில் ஆற்றிய பணிகளையும், இயற்றிய சட்டங்களையும் தேடிப் பயணத்தைத் தொடரும் இந்தத்தருவாயில், கெடு வாய்ப்பாக விஜயபாஸ்கர் அவர்கள் திடீர் மரணமடைந்து விட்டார் என்ற பேரிடியை எதிர்கொண்டு இருக்கிறோம்.*

**இந்தக் கொடுந்துயர் வேளையில் விஜயபாஸ்கர் அவர்களுக்கு நமது கண்ணீர் அஞ்சலியை, செலுத்திக்கொள்கிறோம்.**

**சுயமரியாதை இயக்கத்திற்கு பிந்தைய இடஒதுக்கீட்டு வரலாற்றினை மீண்டும் ஒரு சந்தர்ப்பத்தில், வேறொரு ஆளுமையைக் கொண்டு தொடர்வோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம். எழுத்தாளர் விஜயபாஸ்கர் அவர்களின் ஈடற்ற இழப்பை நிரப்ப, இந்த இடைவெளி நமக்குத் துணைநிற்கும் என்று நம்புகிறோம்.**

...முற்றும்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131